
# திராவிடத்தால் வாழ்கிறோம்

802

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

58

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




## தி.மு.கழகம் : கட்டணம் வாங்காத கல்லூரி!

1954-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி சென்ன, ஒற்றைவாடை திரையரங்கில், தந்தை பெரியார் தலைமையில், 'இராமாயணம்' நாடகத்தை நடத்தினார் எம்.ஆர்.இராதா. தமிழ்நாடெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது அந்த நாடகம். மறுமுனையில் ஆட்சியை இழந்திருந்த ராஜாஜி 'ராமாயணம்' குறித்து எழுதுவதும், வானொலியில் பேசுவதுமாக இருந்தார்.

இப்படி பரபரப்பான அரசியல் சூழலில், நெல்லை மாவட்ட தி.மு.க.வின் 2-வது மாநாடு செப்டம்பர் 18, 19-இல் பாளையங்கோட்டை சமாதானபுரத்தில் நடைபெற்றது. முதல்நாள் சமூக சீர்திருத்த மாநாட்டை எம்.ஜி.ஆர். திறந்துவைக்க, கண்ணதாசன் தலைமை தாங்கினார். காலையில் நடிகர் நாராயணன் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, நகைச்சுவை ததும்பப் பேசினார். நண்பகலுக்குப் பின்னர், என்.வி.நடராசன், டி.கே.சீனிவாசன், பேராசிரியர் க.அன்பழகன், அருண்மொழி, சி.பி.சிற்றரசு ஆகியோர் உரையாற்றினர். மாநாடு நடைபெற்ற இடத்திற்கு அருகிலேயே, அன்றைய சென்னை மாநில ஆளுநர் ஸ்ரீபிரகாசா தங்கியிருந்ததைக் காரணம்காட்டி, 8 மணிக்கு மேல் ஒலிபெருக்கி வைக்க, காவல்துறை அனுமதி மறுத்தது. கழகத் தொண்டர்களின் கொந்தளிப்புடன், முதல் மாநாட்டை இரவு எட்டு மணிக்கு முடித்துக் கொண்டனர். இசைநிகழ்ச்சி ரத்தானது. மறுநாள் காலை 11 மணிக்கு அரசியல் மாநாடு தொடங்கியது. தி.மு. கழகம் நடத்திய மகத்தான போராட்டங்களை எடுத்துச்சொல்லி, மாநாட்டைத் திறந்து வைத்தார் பூங்கோதை.

1952-இல் ஆளுநராக இருந்த பவநகர் இராஜாவை மாற்றிவிட்டு, ஸ்ரீபிரகாசா ஆளுநராக நியமிக்கப்பட்டபோதே ஆளுநர் நியமனம், ஊதியம் தொடர்பான பிரச்சினையைத் தி.மு.க. தீவிரமாகக் கையிலெடுத்தது. 'நம் நாடு' ஏட்டில் வாசகர் கருத்துகளையும் தொடர்ந்து வெளியிட்டார் அண்ணா. அதன் தொடர்ச்சியாக இம்மாநாட்டில் பேசிய முன்னணித் தலைவர்கள், "ஆளுநருக்குத் தரும் பெருத்த ஊதியம், திராவிட மக்களின் வரிப் பணத்தை, உழைப்பை, குருதியை உறிஞ்சும் செயலாகும். அதை உடனடியாகக் குறைக்க முதல்வர் காமராசர் முயற்சித்தல் வேண்டும்" என்று வலியுறுத்தினர்.

முதல்நாள் சமூக சீர்திருத்த மாநாட்டில் பேசிய கண்ணதாசன், "தி.மு.கழகம் உடற்கூற்று நிபுணன் போன்றது; மனோதத்துவ அறிஞன் போன்றது; அதனால்தான் மற்ற நாட்டுச்சீர்திருத்தவாதிகள் கொல்லப்பட்ட இடத்திலே, தன் கொள்கையை ஆரம்பித்துக்கொண்டு வளர்கிறது; வளர்கிறது - வெற்றிப் பாதையில் வளர்ந்துகொண்டு போகிறது!" என்று பேசினார். ஆனால், 'தி.மு.க.-வை நாடகமாடிகள்' என்றும், 'சினிமா கட்சி' என்றும் கேலி செய்தனர் சிலர்.

அவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில் நிறைவுரையாற்றிய அண்ணா, "மக்கள் உட்கார்ந்தால், 'இராமா'; எழுந்தால், 'கிருஷ்ணா' என்னும் அளவுக்கு இராமனையும், கிருஷ்ணனையும் மனதில் பதிய வைத்தது எது? நாடகங்கள்தானே? எனவே வைதீக விஷத்தைப் போக்க விரும்பும் நாமும் அதே கலையையே கருவியாகக் கொண்டு செயலாற்ற வேண்டுமென விரும்புகிறேன். நாட்டிலே ஒருசிலர், 'என்னை ஒரு நாடகமாடி, கூத்தாடி' என்று குறிப்பிட்டாலும் நான் கவலைப்படவில்லை.

மாறாக, எனக்கு இன்னும் ஓய்வு கிடைக்குமானால், உலகிலே தோன்றிய உத்தமர்கள் பலரைப் பற்றி, அவர்களது தொண்டையும், தியாகத்தையும், கொள்கைகளையும் கோட்பாட்டையும் விளக்கக் கூடிய காட்சிகளை, நாடகங்களாக வரைந்து நடித்துக் காட்டவே ஆசைப்படுகிறேன். அறிவைப் பரப்பும் பணியை மேற்கொண்டுள்ளோம் நாம். தி.மு.கழகம் ஒரு கட்டணம் வாங்காத கல்லூரி; அதுவும் மக்களைத் தேடிச் சென்று அறிவூட்டும் பல்கலைக்கழகம்" என்றார்.

...கூட்டம் திரளும்

## பாசிசம் வீழ்கின்ற நாளில், இம்மலர் தேவைப்படும்!



'திராவிட மாடல் நாயகர்' நம் முதலமைச்சரின் பிறந்தநாள் மற்றும் இந்தித் திணிப்பு, தொகுதி மறுவரையறை அநீதி, நிதிப்பகிர்வில் பாரபட்சம் உள்ளிட்டவற்றைக் கண்டித்து, அனைத்துத் தொகுதிகளிலும் இளைஞர் அணி சார்பில், பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் கலந்துகொண்ட இந்திரகுமார் தேரடி, அரவக்குறிச்சி - பரமத்தியில் தனக்கு கிடைத்த அனுபவத்தை முகநூலில் பகிர்ந்து உள்ளார். "இந்தக் குழந்தை வந்தாள்; வந்து இந்த மலரைத் தந்தாள்; தந்து உங்கள் பேச்சை ரசித்தேன் என்றாள்! நான் பிஸ்கட்டும் தரவில்லை. கையெழுத்தும் வாங்கவில்லை.

இந்த மலர் எனக்குச் சொந்தமல்ல. மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்களே உங்களுக்குச் சொந்தம்! இந்தக் கூட்டங்களை ஒருங்கிணைப்பதாக நீங்கள் திட்டமிட்டு அறிவித்தபோது, எப்படி நடக்கும், என்ன தாக்கம் ஏற்படும் என்று யோசித்துப் பார்த்தேன். இப்படி மலர்களோடு மக்கள் குடும்பம் குடும்பமாய்த் திரண்டு வந்து, இளைஞர்கள் பெரியவர்கள் தாண்டி இப்படிக் குழந்தைகள் வரைக்கும் நீங்கள் எண்ணிய கருத்துகள் சென்றடைந்து கொண்டிருக்கின்றன.

இந்தியைத் திணிக்கின்ற ஒன்றியமே, இந்த முத்தமிழ் ஓவியத்தை என்ன செய்வாய்? இவள் தந்த மலரை நீ என்ன செய்வாய்? வளர்ந்து வந்து இவள் எழுதப்போகும் வரலாற்றில், உன் பாசிசத்தை வீழ்த்தியதாக இந்த மலர் வாடாமல் நிற்குமே! அதை நீ என் செய்வாய்!

அப்பாவாக முதல்வர் ஸ்டாலினும் அண்ணனாக உதயநிதியும் கொடுக்கின்ற பாதுகாப்பு உணர்வின் அடையாளம் இந்த மலர்! அடுத்த தலைமுறையில் தழைத்தோங்கும் திராவிடத்தின் மலர்ச்சிக் குறி இந்த மலர்! இந்தியைத் திணிக்க வரும் வாள்முனையின் கூர் மழுங்க வைப்பதிந்த மலர்!

இந்த மலரைப் பாதுகாத்து வைக்கின்றேன்! பாசிசம் வீழ்கின்ற நாளில் இம்மலர் தேவைப்படும்!" என நெகிழ்ச்சியாகப் பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### பேராசிரியரிடம் பெற்ற வாழ்த்து!


செங்கை மதிமாறன்

2005-ஆம் ஆண்டு திருக்கழுக்குன்றத்தில் அன்றைய ஒன்றியக் கழகச் செயலாளர் பெ.தேவதாஸ் அவர்கள் நடத்திய திருமண நிகழ்ச்சிக்காக பேராசிரியர் அவர்கள் வந்திருந்தார். அப்போது அவருக்கு மரியாதை தெரிவித்து, வாழ்த்துப் பெற்றபோது எடுத்த அரிதான புகைப்படம் இது. அப்போது நான், திருக்கழுக்குன்றம் ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளராகப் பணியாற்றினேன். 1970 களிலிருந்தே பேராசிரியர் அவர்களை வழக்கமாகச் சந்திக்கும் பழக்கம் எனக்கு உண்டு. என் புனைப்பெயர் செங்கை மதிமாறன். பேராசிரியரின் தம்பி அறிவழகன்தான் எனக்கு இந்தப் பெயரை வைத்தார்.

**- செங்கை மதிமாறன் (எ) டி.தங்கவேலு, கல்பாக்கம், செங்கல்பட்டு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


58

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## இழந்த உரிமையும், எதிர் அரசியலும்!

கச்சத்தீவு, அரை நூற்றாண்டு காலமாக தமிழ்நாட்டு அரசியலில் அழியாமல் இருக்கும் பிரச்சினைகளுள் பிரதானமானது. இலங்கைக் கடற்படையால் தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருவது, இப்பிரச்சினையை மேலும் முக்கியத்துவம் கொண்டதாக மாற்றியிருக்கிறது. இந்நிலையில், 'கச்சத்தீவின் அரசியல் வரலாறு' என்று சில கபடதாரிகளால் நெய்யப்படும் சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொள்ளாமல் உண்மை வரலாற்றை, அனைவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது.

இந்தியா-இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான 1974-ஆம் ஆண்டு வெளியான 'கச்சத்தீவு' என்ற சிறு ஆய்வு நூல் நமக்கு போலிச் செய்திகளை எதிர்கொள்ளவும் கச்சத்தீவின் பன்முக முக்கியத்துவங்களை உணர்ந்து கொள்ளவும் துணை புரிகிறது. திராவிட இயக்க சார்பு கொண்ட எழுத்தாளர் செம்பியன் அவர்கள் எழுதிய இந்நூலை, வைரம் பதிப்பகம் வெளியிட்டுள்ளது.




இரண்டாம் உலகப் போரின் போது, கச்சத்தீவு பிரிட்டிஷ் கப்பற் படைகள் வெடி குண்டுகளை வெடித்து, சோதனை செய்யும் இடமாக இருந்திருக்கின்றது. இந்தியத் தெற்குக் கடற்கரையில் இருக்கும் பாம்பனுக்கும் இலங்கையின் வடக்குக் கடற்கரையில் இருக்கும் 'டெல்த்' என்ற தீவிற்கும் இடையே சமதொலைவில் உள்ள சிறு தீவு தான் கச்சத்தீவு.

1947-இல் 'ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம்' வரும் வரை, சேதுபதி மன்னர்கள் கட்டுப்பாட்டில் இருந்த இந்தத் தீவினைக் குத்தகைக்கு விட்டு, வருவாய் பெற்ற ஆவணங்கள் நமக்குக் காண கிடைக்கின்றன என்ற வரலாற்று செய்திகளைக் கவனப்படுத்துகிறது.

மேலும், இந்திய ஒன்றிய பிரதமர்கள் அனைவரும் நாற்புறமும் நிலம் சூழப்பட்ட பகுதிகளில் (Landlocked Regions) இருந்தே தேர்ந்தெடுக்கப்பட்ட காரணத்தால், கடல் குறித்தும் அதன் வளங்கள் பற்றியும் அவற்றின் மகத்துவத்தையும் அவர்கள் அறியாமல் இருந்தனர் என்ற முக்கியமான புள்ளியைச் சுட்டிக்காட்டுகிறது. இதற்குச் சான்றாக, மக்களவையில் கச்சத்தீவு குறித்த விவாதங்கள் உண்டானபோதெல்லாம் ஒன்றிய பிரதமர்கள் அக்கறையின்மையோடு அளித்த பதில்களை இந்நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் இரண்டு நாடுகளுக்கிடையே நிலவும் கடல்சார் எல்லைப் பிரச்சினைகளை எல்லாம் சுட்டிக்காட்டி, சர்வதேச நீதிமன்றம் அவற்றைக் கையாண்ட விதத்தைக் கவனப்படுத்தி கச்சத்தீவு விவகாரத்தில் இந்திய அரசின் பக்கமே நியாயமும் உரிமையும் இருப்பதை இந்நூல் கவனப்படுத்துகிறது. 'இந்தியா-இலங்கை ஒப்பந்தம்' தமிழ் நாட்டு அரசின் ஒப்புதலின்றி கையெழுத்திடப்பட்டது தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட அநீதி என்று இந்நூல் வாதிடுகிறது.

கச்சத்தீவைத் தமிழ்நாடு இழந்ததால், கடல் அடிப்பரப்பை இழந்து, கடற்கரையைச் சார்ந்த மணல் மேட்டு நிலப்பரப்பை இழந்து, இவற்றின் கனிமவளத்தை இழந்து, ஆழ்கடல், கனிமவளத்தை எடுப்பதற்கான வாய்ப்பினை இழந்து, கடலின் மேலே வான்வெளியையும் இழந்து தமிழ்நாடு உரிமையற்றுக் கிடப்பதை ஆற்றாமையோடு பதிவுசெய்யும் நூல், கச்சத்தீவை மீட்பதற்கான நடவடிக்கைகளில் இந்திய ஒன்றிய அரசு ஈடுபட வேண்டும் என்பதை அழுத்தமாக வலியுறுத்தி நிறைவுறுகிறது.

தமிழிணையம் -மின்னூலகத்தில் தரவிறக்கம் செய்யும் வகையில், இந்த நூல் கிடைக்கிறது. கச்சத்தீவு பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி தீவைத் திரும்பப் பெற வேண்டும் என்ற வரலாற்று உரிமை முழக்கத்தை, மீண்டும் தமிழ்நாடு சட்டப்பேரவை முழங்கி இருக்கும் இத்தருவாயில், அவசியம் வாசிக்கப்பட வேண்டிய நூல் இது.

...வாசிப்போம்.

## மலரும் நினைவுகள் 

### கிளைக் கழகங்களில் தீர்மானம்!

1957-ஆம் ஆண்டு, 'இந்தி ஆட்சி மொழி மசோதா' கொண்டு வரப்பட்டபோது, தமிழ்நாட்டில் மீண்டும் போராட்டங்கள் வெடித்தன. அந்த ஆண்டு அக்டோபர் 13-ஆம் தேதி 'இந்தி எதிர்ப்பு' நாளாகக் கடைப்பிடிக்க தி.மு.கழகம் அறைகூவல் விடுத்தது. கிளைக் கழகங்கள், துணை அமைப்புகள் வரை இந்தி எதிர்ப்புத் தீர்மானங்கள் நிறைவேற்றி, அவற்றை ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுக்கும் அனுப்ப வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131